பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

15 03 2026 SUNDAY 12 40 PM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி பட்ஜெட் அறிவிப்புகள் தொடர்பான “மை பாரத்” இணையதள போட்டியில் வெற்றி பெற்ற இளையோருடன் இன்று கலந்துரையாடுகிறார்.

2. தமிழக உள்ளிட்ட 5 சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அட்டவணை இன்று மாலை 4 மணிக்கு வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

3. ஜம்மு கஷ்மீரின் முன்னாள் முதலமைச்சர் திரு. ஃபரூக் அப்துல்லா மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து விசாரணை நடத்த, சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

4. ஆப்கானிஸ்தான் மீது பாகிஸ்தான் நடத்திய தாக்குதலுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

5. ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் வடகிழக்கு அணி இன்று Jamshedpur அணியை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி பட்ஜெட் அறிவிப்புகள் தொடர்பான “மை பாரத்” இணையதள போட்டியில் வெற்றி பெற்ற இளையோருடன் இன்று கலந்துரையாடுகிறார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கிய பயணத்தில் பட்ஜெட் அறிவிப்புகளை செயல்படுத்துவது குறித்து இளையோரிடம் அவர் ஆலோசனை நடத்துகிறார்.

பட்ஜெட் தொடர்பாக மத்திய இளையோர் நலத்துறை அமைச்சகம் நடத்திய இணையதளம் வாயிலான போட்டியில் வினாடி-வினா மற்றும் கட்டுரைப் போட்டிகள் இடம்பெற்றன.

வினாடி-வினாவில் 12 லட்சம் பேரும், கட்டுரைப் போட்டிகளில் 47 ஆயிரம் பேரும் பங்கேற்றதாக இளைஞர் நலத்துறை தெரிவித்துள்ளது.

இதில் உத்தரப்பிரதேசம், தமிழ்நாடு மற்றும் மேற்குவங்க மாநிலங்களில் இருந்து அதிக அளவில் இளையோர் பங்கேற்றதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

>>>>>><<<<<<

அஸ்ஸாம் மாநிலத்தின் சுகாதாரத்துறையை மேம்படுத்துவதற்காக 2 ஆயிரத்து 812 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று அடிக்கல் நாட்டினார்.

குவஹாத்தியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு திட்டங்களை இன்று அவர் தொடங்கி வைத்துப் பேசிய அவர், அம்மாநிலத்தின் சுகாதாரத் துறையை

மேம்படுத்துவதற்காக முதலமைச்சர் திரு. ஹிமந்த பிஷ்வா சர்மா பாடுபட்டு வருவதாக கூறினார்.

அஸ்ஸாம் மாநிலம், சுகாதாரத்துறையில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக உருவெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பின்னர், 115 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அபைபுரி மருத்துவமனையையும் திரு. அமித் ஷா திறந்து வைத்தார்.

தொடர்ந்து நடைபெறும் இளையோர் விழாவிலும் அவர் உரையாற்ற உள்ளார்.

>>>>>><<<<<<

உலகளாவிய நெருக்கடிக்கு இடையிலும் நாட்டின் பொருளாதாரம் வலுவாக உள்ளது என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

தில்லியில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசிய அவர், நாட்டின் பொருளாதார வளர்ச்சி அடுத்த ஆண்டு 7 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

உலகில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடாக இந்தியா திகழ்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

போர் உள்ளிட்ட உலகளாவிய நெருக்கடிகளை இந்தியா வாய்ப்புகளாக மாற்றி வருகிறது என்றும், சுயசார்பை நோக்கிய முயற்சிகளை நாடு அதிகரித்து வருவதாகவும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அட்டவணை இன்று மாலை 4 மணிக்கு வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தமிழகம், கேரளா, மேற்குவங்கம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தல் குறித்த அறிவிப்பு, தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்படுகிறது.

294 தொகுதிகளைக் கொண்ட மேற்குவங்க சட்டப்பேரவையின் பதவிக்காலம் மே மாதம் 7ஆம் தேதியும், தமிழகம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைகளின் பதவிக்காலம் மே-10ஆம் தேதியும், அஸ்ஸாம் மாநில சட்டப்பேரவையின் பதவிக்காலம் மே 20ஆம் தேதியும், கேரள சட்டப்பேரவையின் பதவிக்காலம் மே 23ஆம் தேதியும் முடிவடையவிருப்பதால், அதற்கான தேர்தல் அறிவிக்கையை இன்று வெளியிடுவதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<

மேற்காசியாவில் நிலவும் சூழல் காரணமாக ஏர் இண்டியா மற்றும் ஏர் இண்டியா எக்ஸ்பிரஸ் நிறுவனங்களின் 14 விமானங்களின் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் சார்ஜாவிலிருந்து – தில்லி, கன்னூர், கொச்சி, கோழிக்கோடு, மும்பை மற்றும் திருவனந்தபுரம் ஆகிய இடங்களுக்கு விமான சேவை வழக்கம் போல் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும். Ras Al Khaimah விமான நிலையத்திலிருந்து இரண்டு விமானங்கள், கோழிக்கோடு மற்றும் கொச்சிக்கு இயக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு அமிரகத்தின் விமான சேவை இயக்ககத்தின் அறிவுரையின்படி இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக ஏர் இண்டியா நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ள விமானங்களில் பதிவு செய்துள்ள பயணிகள், தங்களது பயணக் கட்டணத்தை திரும்ப பெற்றுக்கொள்ளலாம் என்றும் ஏர் இண்டியா கூறியுள்ளது.

துபாய் விமான நிலையத்திலிருந்து இயக்கப்படும் இண்டிகோ விமானங்களின் வருகை மற்றும் புறப்பாடு குறித்த நேர அறிவிப்புகளை பயணிகள் கவனத்தில்

கொண்டு, தங்களது பயணத்தை மேற்கொள்ளுமாறு அந்த நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>>><<<<<<

ஜம்மு கஷ்மீரின் முன்னாள் முதலமைச்சரும், ஜம்மு கஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவருமான திரு. ஃபரூக் அப்துல்லா மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து விசாரணை நடத்த, சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு புலனாய்வுக் குழுவின் தலைவராக ஜம்மு-சம்பா-கத்துவா பகுதியில் துணை இன்ஸ்பெக்டர் ஜென்ரல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த குழுவினர் மார்ச் 11ஆம் தேதி, ஜம்மு கஷ்மீரில் திருமண விருந்தில் கலந்து கொண்ட திரு. ஃபரூக் அப்துல்லா மீது தாக்குதல் நடத்தப்பட்டது குறித்த விசாரணையை மேற்கொண்டு, அறிக்கை அளிப்பார்கள் என்று காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

>>>>>><<<<<<

ஆப்கானிஸ்தான் மீது பாகிஸ்தான் நடத்திய தாக்குதலுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் பலர் பலியாகியுள்ளனர்.

மேலும், அடிப்படை கட்டமைப்பு வசதிகள் சீர்குலைக்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் இறையாண்மையை பாதிக்கும் விதமாக பாகிஸ்தான் தாக்குதல்களை நடத்தி வருவதாக அவர் குற்றம் சாட்டினார்.

ஆப்கானிஸ்தானின் நிலப்பகுதி மற்றும் இறையாண்மையை மதித்து நடக்க வேண்டும் என்றும் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

கொல்கத்தாவில் பிஜேபி மற்றும் திரிணமுல் காங்கிரஸ் கட்சியினரிடையே ஏற்பட்ட மோதல் சம்பவம் குறித்த அறிக்கையை காவல்துறை ஆணையர் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்து கொண்ட பேரணியில் பங்கேற்பதற்காக சென்று கொண்டிருந்த பிஜேபி கட்சியினர் மீது, க்ரீஸ் பார்க் பகுதியில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சிலர் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் 8 காவல்துறையினர் உட்பட இரண்டு கட்சிகளையும் சேர்ந்த பலர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதலில் படுகாயமடைந்த, மேற்கு கொல்கத்தா மாவட்ட பிஜேபி தலைவர் திரு. Tamochana Ghosh மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

தாக்குதலில் ஈடுபட்ட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மாநில காவல்துறையினர் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

தில்லி மற்றும் கொல்கத்தாவில் 14 கோடி ரூபாய் மதிப்பிலான தங்கம், வெள்ளி மற்றும் இந்திய ரூபாய் நோட்டுக்களை கடத்தியதாக ஆறு பேரை வருவாய் புலனாய்வு பிரிவு இயக்கக அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இந்த சோதனையின்போது, 8 கிலோ தங்கம், 7 கிலோ வெள்ளி, 51 லட்சம் ரொக்கப்பணம் ஆகியவை கைப்பற்றப்பட்டதாக அந்த இயக்ககம் கூறியுள்ளது.

>>>>>><<<<<<

மேற்காசிய பகுதியில் நிலவும் சூழல் காரணமாக, நாளை தொடங்கி, ஏப்ரல் 10ஆம் தேதிவரை நடைபெறவிருந்து. 12ஆம் வகுப்பிற்கான CBSE - தேர்வுகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இம்மாதம் 1ஆம் தேதி முதல் 9ஆம் தேதிவரை நடைபெறவிருந்த தேர்வுகள், ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அந்த தேர்வுகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக CBSE தெரிவித்துள்ளது.

மேற்காசிய பகுதியில் உள்ள CBSE மாணவர்களுக்கான தேர்வு முடிவுகள் குறித்த அறிவிப்பு, பின்னர் வெளியிடப்படும் என்று அந்த வாரியம் கூறியுள்ளது.

>>>>>><<<<<<

இந்திய மக்கள் விடுதலைக் கழகம் என்ற தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த 6 பேரை ஜார்க்கண்ட் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

Khunti மாவட்டத்தில் Tajna ஆற்றுப் பகுதியில் காவல்துறையினர் நடத்திய தேடுதல் வேட்டையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டதாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. மனிஷ்குமார் தெரிவித்துள்ளார்.

இவர்களிடமிருந்து ஏராளமான ஆயுதங்களும், வெடிபொருட்களும், கைபேசிகளும், வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக காவல்துறையினர் கூறியுள்ளனர்.

இந்த தீவிரவாதிகள் ஆள்கடத்தல், மிரட்டி பணம் பறித்தல் உள்ளிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்ததாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

>>>>>><<<<<<<

ஈரானுக்கு எதிரான தாக்குதல், 3வது வாரத்தை எட்டியுள்ள நிலையில், Hormuz நீரிணைப் பகுதியை கடந்து செல்லும் கப்பல்களை தாக்கி அழிப்போம் என்ற ஈரானின் எச்சரிக்கைக்கு அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சீனா, ஃபிரான்ஸ், ஜப்பான், தென்கொரியா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகள் தங்களுடைய போர்க் கப்பல்களை Hormuz நீரிணை பகுதிக்கு அனுப்பி, அந்த நீரிணையை பாதுகாக்க முன்வர வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஈரானின் கடற்கரை பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் அந்நாட்டின் போர்க்கப்பல்கள் மற்றும் படகுகளை அமெரிக்கா அழித்தொழிக்கும் என்று திரு. டோனல்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

இதற்கிடையே, அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடன் உறவு கொண்டுள்ள நாடுகளின் கப்பல் போக்குவரத்துக்கு அனுமதி அளிக்கப்படவில்லை என்று ஈரானின் வெளியுறவு அமைச்சர் திரு. Abbas Araghchi அவித்துள்ளார்.

இருப்பினும் Hormuz நீரிணை வழியாக சர்வதேச கப்பல் போக்குவரத்து எவ்வித தடையும் இன்றி நடைபெற்று வருவதாகவும் இந்தப் பகுதி முற்றிலும் மூடப்படவில்லை

என்றும் அமெரிக்க தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் என்றும் திரு. Abbas Araghchi தெளிவுபடுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

தில்லி, ஹரியானா, உத்ராகண்ட், கிழக்கு உத்தரபிரதேசம், ஹிமாச்சலப்பிரதேசம், ஜம்மு கஷ்மீர், லடாக் மற்றும் பஞ்சாபில் இடியுடன் கூடிய ஆலங்கட்டி மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக அப்பகுதிக்கு ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், அருணாச்சலபிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா ஆகிய மாநிலங்களின் பல்வேறு பகுதிகளில் ஒரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் வடகிழக்கு அணி இன்று Jamshedpur அணியை எதிர்கொள்கிறது.

குவஹாத்தியில் இப்போட்டி மாலை 5 மணிக்கு தொடங்குகிறது.

லக்னோவில் இரவு மணி 7.30-க்கு நடைபெறவுள்ள மற்றொரு ஆட்டத்தில் Kashi அணி - மும்பை அணியை எதிர்த்து விளையாடுகிறது.

>>>>>>END<<<<<<<